பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

12 12 2024 **THURSDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

    **நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2. பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. பதினோரு அரசு பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வகங்கள் அமைக்க 12 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.
4. டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தமிழக மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜாலி – காயத்ரி கோபிசந்த் இணை இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, அடுத்த 24 மணிநேரத்தில் வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*<u>(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (1) – 28 செகண்ட்ஸ்)</u>*

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் திரு பாலச்சந்திரன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் (2) – 60 செகண்ட்ஸ்)*

இதற்கிடையே, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் நேற்றிரவு முதல் பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சுரேகா – 30 செகண்ட்ஸ்)*

தொடர் மழை காரணமாக பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படுவதால் கரையோரப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - தனசேகரன் - 49 செகண்ட்ஸ்)*

விழுப்புரம் மாவட்டம் சாத்தனூர் மற்றும் வீடூர் அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதன் காரணமாக பம்பையாறு மற்றும் வராக ஆற்றின் கரையோரப்பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்திலும் தாமிரபரணி கரையோரப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு ஆட்சியர் திரு இளம்பகவத் கேட்டுக்கொண்டுள்ளார்.

*(வாய்ஸ் பைட் - இளம்பகவத் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2010-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 புள்ளி ஐந்து எட்டு சதவீதமாக இருந்த வாராக்கடன், கடந்த செப்டம்பர் மாதம் 3 புள்ளி ஒன்று ஐந்து சதவீதமாக குறைந்துள்ளதாக நிதித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வகங்களை அமைப்பதற்காக 12 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி செழியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இதன்படி, நெல்லை, தருமபுரி, ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் அமைக்கப்பட உள்ளதாக கூறியுள்ளார்.

கோவை, சேலம், பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு ஆய்வகம் ஏற்படுத்தப்பட உள்ளதாகவும் வேலூர், தஞ்சாவூர், திருச்சியில் உள்ள கல்லூரிகளில் பொருள்சேர் உற்பத்தி ஆய்வகம் அமைக்கப்படும் என்றும் அமைசச்ர் தெரிவித்துள்ளார்.

காரைக்குடி, போடியில் உள்ள கல்லூரிகளில் இணைய ஆய்வகம் அமைக்கப்படும் என்றும் திரு கோவி செழியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தமிழக மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், புதுதில்லியில் இதுதொடர்பாக, மத்திய இணையமைச்சர் திரு எல்.முருகனுடன் இணைந்து சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டியை சந்தித்து கோரிக்கை மனு அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினையில் திமுக அரசு வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து தவறான தகவல்களை கொடுத்து வருவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழக மக்களின் நலனுக்கு எப்போதும் உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி, நாயக்கர்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள மக்களுக்கு விரைவில் சாதகமான அறிவிப்பு வெளியாகும் என்றும் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மகாகவி பாரதி படைப்புகளின் தொகுப்பை பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று, புதுதில்லியில் வெளியிட்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியின் கோல்டு அலைவரிசையில் இன்றிரவு மணி 8.15-க்கு ஒலிபரப்பாகிறது.

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி அகில இந்திய வானொலி நிலையத்தின் செயல்பாடுகளை இன்று பார்வையிட்ட ஆட்சியர் திருமதி சாந்தி, அரசு திட்டங்கள் குறித்தும் பேரிடர் காலங்களில் தகவல்களை அளிப்பதிலும் அகில இந்திய வானொலி சிறப்பாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

---------------

கோட்ட அளவிலான அஞ்சல் குறைதீர் முகாம் சென்னை தலைமை தபால் அலுவலகத்தில் வரும் 21-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலையில் பெய்த கனமழை காரணமாக, கோமுகி அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததையடுத்து அணையிலிருந்து 2 ஆயிரம் கனஅடிநீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் கரையோரப்பகுதியில் வசிக்கும் மக்கள் ஆற்றை கடக்கவோ, குளிக்கவோ கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் பட்டம் வென்றார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவர் சீனாவின் **Ding Liren** –ஐ வென்றார்.

-----------

உலக பேட்மிண்டன் இறுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் திரிஷா ஜாலி - காயத்ரி கோபிசந்த் இணை, 21-19, 21-19 என்ற செட் கணக்கில்

மலேசியாவின் **Pearly Tan –Thinaah Muralitharan** இணையை வென்றது.

நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் திரிஷா ஜாலி - காயத்ரி கோபிசந்த் இணை - ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

-----------------

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>

<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

1) உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குகேஷ் பட்டம் வென்றார்.

2) வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

    **நெல்லை, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

3) பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன் வெகுவாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

4) பதினோரு அரசு பொறியியல் கல்லூரிகளில் நவீன ஆய்வகங்கள் அமைக்க 12 கோடியே 38 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5) டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தமிழக மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

<<<<<<END>>>>>>